492

ஜய பேரிகை, மலர் 12

நாமார்க்கும் குடியல்லோம்! நமனை யஞ்சோம்!!

ஸ்ரீ

பொன் கொள்ளை

அல்லது

நாணய மாற்று மோசம்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

எழுதியது

விலை ஓரணா

தமிழன்பருக்கும் தேசபக்தருக்கும் வந்தனம்!

"சுயராஜ்ய பேரிகை"

மலர் 1 ஸர்தார் பகத் சிங்
2 கான்பூர் கலகம்
3 எல்லைப்புற காந்தி
4 காங்கிரஸ் சரிதம்
5 பாரத ஜோதி
6 இந்தியக் கடன் சுமை
7 ஸர்தார் படேல்
8 சத்தியாக்கிரக வீரர்
9 ஜான்ஸி ராணி
10 விநாயக் சாவர்க்கார்
11 மகாத்மா காந்தியின் ராஜீய திருவாசகம்
12 பொன் கொள்ளை நாணய மாற்று மோசம்
13 காந்தி "மாமா" (அச்சில்) காந்தி தாதா கதைகள்
14 நேரு வீரர் சரிதம் மோதிலால், ஜவஹர்லால்
15 வட்ட மேஜை மகாநாடு நடவடி

மாதம் இரண்டு மலர்கள் வெளிவரும்

ஏஜண்டுகள் தேவை

அன்பர்காள்!

தற்சமயம் உலகெங்கும் செல்வநெருக்கடி, வியாபார மந்தம், வாழ்வில்லாச்சங்கடம். மக்களுக்கோ கண்கலக்கம், பிழைப்புக்குத் திகைப்பு. இங்கிலாந்திலே பொன் வறட்சி, கட்சிப்புரட்சி. இந்தியாவிலோ பொன்கொள்ளை, நாணயமாற்றில் மோசம். ஜெர்மனியில் பணத்தட்டு, பரிதவிப்பு. அமெரிக்காவிலோ, வரவு குறைவு, செலவுமிகுதி. பிரான்ஸில்மட்டும் பொன்குவியல். யுகப்பிரளயம் வேறு வேண்டுமோ? காரணம் யாது? இஃதே மதியூகிகளின் மனக்கவலை. அளவுக்கு மிஞ்சின் அமுதமும் விஷமே. ஈசன் தண்டனை சீறிவருகின்றது; ஆனதுபற்றியே உலகம் தத்தளிக்கின்றது. யந்திரசாதனங்களைப்பெருக்கி, வாழ்வின் தேவைகளை வளர்த்து, அளவுக்குமிஞ்சிய பண்டங்களைக் குவித்து, மானிடர் மிருகப்பிராயமாகி விட்டனர். ஆதவினால் தான், பணத்தட்டு என்னும் பிரளயம் தோன்றியிருக்கின்றது. மக்கள் மதிகொண்டு மகிமை பெறுவரா? மடிவரா? தெரியவேண்டும். ஆண்டவன் அருள் சுரப்பானாக! வந்தேமாதரம்!

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்,
ஆசிரியர், "சுயராஜ்ய பேரிகை"
வீர விஜயாலயம், 32, ஐயப்பசெட்டி தெரு,
மண்ணடி, மதராஸ்.

3611

சுயராஜ்ய பேரிகை, மலர் 12

நாமார்க்கும் குடியல்லோம்! நமனை யஞ்சோம் !!

ஸ்ரீ

பொன் கொள்ளை

492

அல்லது

நாணயமாற்[illegible]கம்

25 JAN 1932

1. முன்[illegible]ரை

காசா லேசா என்பர். காசாலே சா என்பது முண்டு. காசு ஒன்று இன்றேல், ஒரு கா[illegible] இல்லை; காசினியும் கதிகலங்கும். அன்று, ஜெர்மன் ராஜ்யம் காசு இல்லாமல் கதறியது; இன்றோ இங்கிலாந்து தேசம் திணறுகின்றது. இந்தியாவின் நிலைமையைக் கேட்கவேண்டுமோ? நம் நாட்டுப்புறங்களிலே காசு குதிரைக் கொம்பாக இருக்கின்றது; நகரங்களில்தான் என்ன? நாணயப் புழக்கம் மிகக் குறைவே. கிராம ஜனங்கள் தானியங்களை வைத்துக்கொண்டு அழுகிறார்கள்; கிஸ்தி கட்ட வகையில்லையே என்று ஓலம் இடுகிறார்கள். அத் தானியங்களை வாங்குவார் [illegible]வரும் இலர். நகர வணிகரோ சரக்கைக் கட்டிவைத்[illegible]க்கொண்டு விழிக்கின்றனர். வியாபாரம் மகா மந்த[illegible] இருக்கின்றது. மக்களின் நிலைமை ஈது என்றால், [illegible]லையோ இன்னும் மிக மோசம். பிரிட்டிஷ் [illegible]ழ்வின் செலவைக் குறைத்துக் கொள் [illegible] இன்பங்களை விட்டுக் கொடுக்கிறார். [illegible]டியாளும் அதிகார வர்க்கமோ வேறு [illegible]து சம்பளத்தில் ஒரு சிறிது குறைத்துக் [illegible]த்துள்ளது; புதிய வரி விதிக்கின்றது;

219496

காலணா கார்டை அரையணாவாக உயர்த்தியும் பற்றாமல் முக்காலணாவாக உயர்த்தியிருக்கிறது இப்போது.

முன்னம் பதின்மூன்று ரூபாய்க்கு விற்ற சவரன் இப்போது இருபது ரூபா ஆகிவிட்டது. வாரந்தோறும் கோடிக்கணக்கான சவரனும் பொன்னும் நம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆகின்றன. கடந்த இரண்டு மாதங்களிலே பம்பாயிலிருந்து மட்டும் பன்னிரண்டுகோடி விலையுள்ள தங்கம் கொள்ளை போயிருக்கிறது. அமெரிக்காவும் பிரான்ஸும் அப்பொன்னையும் தங்கப் பாளங்களையும் வாங்கிக் குவிக்கின்றன. நம்மவரிலே பலரும் தங்க நகைகளை விற்றுப் பணமாக்க முற்படுகின்றனர். இத்தகைய பணத்தட்டு இன்றளவும் உலகில் நேர்ந்ததில்லை. பணத்தட்டு அதிகரிக்கவே, பழமை பறக்கின்றது; பவிஷு கெடுகின்றது; வாக்கு நாணயம் மிகக் குறைகின்றது; சத்தியம் சோர்வடைகின்றது. சுருங்கச் சொல்லின், எல்லா உயிர்களும் ஒடுங்கி முடங்குகின்றன. உண்பதும் உறங்குவதுமாக இருந்த மனிதரும் உதைப்புக் கொண்டுளர்; உள்ள விஷயத்தை உணர ஊக்கம் கொள்ளவும் உன்னுகின்றனர். இவ்விதம் தேசம் எங்கும் பணத்தட்டு, செல்வ நெருக்கடி, வியாபார மந்தம், தொழில் குறைவு, கூலியில்லாக்கோலம் தோன்றக் காரணம் யாது? காரண பூதர் யாவர்? அக் காரணத்தையும் காரண பூதரையும் கண்டறிந்து, கட்டுப்படுத்த யாது வகை? என்னும் விஷய விவரங்களை இந்நூலில் ஓரளவு ஆராய்வோம்.

2. பெட்டிச் சாவி

உடலின் அமைப்பே போலுளது உலக அமைப் ஓர் அங்கம் நோய் கொள்ளின், உடல் முழுதும் வரு நேரும். அங்ஙனமே ஒரு தேசம் கஷ்டம் அடையி அது பாருலகினையே பாதிக்கும். நடு நாயகமான தே பணத்தட்டால் பரிதபிப்பின், எல்லாத் தேசங்களும் தி டாட வேண்டியதுதான். இத்தகைய திக்கற்ற நிலைமை சென்ற ஒரு நூற்றாண்டாகத்தான் உலகில் ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்போ, போக்கு வரத்து சாதனங்கள் அவ்வளவாக இல்லை; அதனால் ஒரு தேசத்துக்கும் மற்றொ

M211, N31

தேசத்துக்கும் அதிகமாகத் தொடர்பு இராதுபோயிற்று. இப்போதோ கடல் மார்க்கங்களும் ரயில் பாதைகளும் பெருகிவிட்டன ; தொழிலும் வர்த்தகமும் வளர்ந்து வருகின்றன. சிற்சில தேசங்கள் கேவலம் விவசாயத்தையே நம்பியுள. சிற்சில தேசங்களோ தொழிலையே உயிர்நிலையாகக் கொண்டுள. விவசாயப் பொருள்களைக்கொண்டே, தொழில் வகைகள் பெருகமுடியும். தொழில் வகைகள் பெருகின், அப்பண்டங்கள் விலையாகவேண்டும். இதனால் தேசங்களுக்கு இடையே வியாபாரத்தொடர்பு உண்டாகி ஓங்குகின்றது. இந்நிலையில் தேசங்கள் பலவும் நேசமாக வாழ்ந்தால், அல்லது ஒன்றை யமுக்கிக் குதிரையேற மற்றொன்று முயலாமல் இருந்தால், உலகமாந்தர் ஓரளவு நிம்மதியாக வாழ இயலும். தேசங்களுக்கு இடையே போட்டியும் கசப்பும் சச்சரவும் சண்டையும் ஏற்பட்டுவிட்டால், அல்லலும் அனர்த்தமுமே விளையும்.

அரச மரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் பிடித்தது என்பது பழமொழி. ஐரோப்பாவைப் பிடித்த சனியனே, ஆசியாவையும் கீழ்த்தேசங்களையும் பிடித்தாட்டத் தலைப்பட்டது. இந்த உண்மையை அன்றே—அதாவது ஐரோப்பிய மகாயுத்தம் மூண்ட காலையிலும், போர் தீர்ந்து சமரஸம் தோன்றியபின்பும்—ஓரளவு நம்மவர் உணரலாயினர். இன்றோ அந்த உண்மை நமது மண்டையைப் பிளந்துகொண்டு, மூளைக்குள்ளே புக முயலுகின்றது. எஜமானன் இன்பம்கொண்டு திரியும்போது, வேலையாளனுக்கு அந்த இன்பத்தில் பங்கு இல்லாதுபோயினும் துன்பம் அவ்வளவாக நேராது. எஜமானனுக்குக் கஷ்டம் நேர்ந்துவிட்டாலோ, பணியாளனது பாடு மிகவும் திண்டாட்டமாக முடியும். நமது இந்தியா தேசத்தினுக்கு இங்கிலாந்துதேசம் எஜமான ஸ்தானத்தில் இருக்கின்றது. நமது தேசத்தின் செல்வ நிலையை, வியாபார முறையை, நாணயச் செலாவணியை, வாழ்வின்போக்கை நமது இஷ்டப்படி அமைத்துக்கொள்ள நமக்கு உரிமையும் இல்லை ; அதிகாரமும் இல்லை ; அத்துறைகளில் இங்கிலாந்து கீறிய கோட்டைத் தாண்டிநடக்க நம்மால் இயலவில்லை ; மேலும் இங்கிலாந்தின் நலத்தையே பெரிதும் மதித்து, இந்தியா

வின் வியாபாரமுறையும் நாணயச் செலாவணியும் செல்வ நிலையும் வகுக்கப்பட்டுள. அவ்விதம் இல்லாமல், நமக்கு உரிமையும் அதிகாரமும் இருக்குமாயின், செல்வ நெருக்கடியை நாம் கூடியவரையில் சமாளித்துக்கொள்ளலாம். ஆதலினால்தான், பணப் பெட்டியின் சாவி எங்களிடம் இருக்கவேண்டும், எங்கள் பணத்தை எங்கள் இஷ்டப்படி நாங்கள் செலவு செய்துகொள்வோம், செல்வ நிலையையும் சீரிய முறையில் வகுத்துக் கொள்வோம், என்று காங்கிரஸ் மகாசபை இங்கிலாந்து தேசத்துடன் வாது புரிகின்றது, மல்லுக்கும் நிற்கின்றது.

3. சூது வாது

மலை விழுங்கும் மகாதேவனும் சித்திரக் குள்ளனும் பிணைந்து இணைந்து நேசமாக வாழ்தல் விசித்திரமே. தொழில் பெருக்கில் தலைசிறந்து, படைவன்மையில் பெருமிதம் வாய்ந்து, பாராளும் பாக்கியம் படைத்துள்ள இங்கிலாந்தும், தொழில் வளர்ச்சிக்கு வகையின்றி, அன்னிய ஆட்சி முறைக்கு ஆளாகி, அவல நிலையில் கிடக்கும் இந்தியாவும், சரிசமானமான தன்மை இல்லாத காலத்து, நேசமாக வாழ்ந்துவருதல் என்பது எங்ஙனம் இயலும்? இந்தியாவின் வியாபார நிலைமையில் உள்ள வெகு விசித்திரமான தன்மையைக் கவனித்தல் வேண்டும். இந்தியாவில் வழங்கும் நாணயமோ ரூபா, அணா, பைசா. இங்கிலாந்தில் வழங்குவது சவரன், ஷில்லிங், பென்சு எனும் தங்க நாணயமாகும். இத்தேசத்தில் பெருத்த வியாபாரிகளாக விளங்குவோர் அன்னியரான ஆங்கிலேயரே. இந்தியரிலும் இரண்டொருவர் பெருத்த வியாபாரிகளாக இருந்தபோதிலும், அந்த அன்னியரின் உதவியை நாடியே, அல்லது அந்த அன்னியரின் மூலமே, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்செய்ய நேருகின்றது.

இந்நிலையில், சாமான்களை இறக்குமதி செய்தாலும் சரி, ஏற்றுமதி செய்தாலும் சரி, சாமான்களின் விலையை ரூபாயில் மதிப்பதில்லை; பவுன் கணக்கில்தான் மதிக்க வேண்டும். எங்கள் வெள்ளி நாணயத்திலேயே மதிப்பிட்டுத் தருவோம் என்று நாம் எங்ஙனம் கூறுவது? நாணய

மாற்று விகிதத்தை வகுக்கும் அதிகாரம் இங்கிலாந்துக்கே உளது. சுயராஜ்யம் இல்லாச் சீர்கேடே இதற்குக் காரணமாம். இவ்வளவுதானோ? ஜப்பான், ஜர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களுடன் இந்தியா நடத்தும் வர்த்தகத்திற்கும் இங்கிலாந்தின் மூலமாகவே பணத்தைப் பெறவும் கொடுக்கவும் வேண்டும். வியாபார உண்டியல்களை எல்லாம் இங்கிலாந்திலேயே மாற்றவேண்டியிருக்கிறது. வர்த்தகத்தில் மகா தந்திரசாலிகள் வணிகரும் கோமட்டிகளுமே ஆவார்கள் என்பது பழங்கதை. ஆங்கிலேயரே தற்சமயம் வர்த்தகத் துறையில் ஈடும் சோடும் இல்லாத தந்திரசாலிகள். இங்கிலாந்திலே விவசாயம் மிகவும் குறைவு; தொழிலும் வர்த்தகமுமே அதிகம். அப் பண்டங்களுங்கு ஏற்ற சந்தையாக இந்தியாவையே அன்னவர் கொண்டுளர். தனது தொழிலுக்கு உரிய மூலப்பொருள் பலவற்றிற்கும் இந்தியாவையே இங்கிலாந்து பெரிதும் நம்பிக் கிடக்கின்றது.

இங்ஙனம் நாணயமாற்று விகிதத்தைத் தனக்கு அநுகூலமான முறையில் இங்கிலாந்து நிர்ணயித்துக்கொள்ளாமல் இருக்குமோ? தான் அனுப்பும் சாமான்களையும் வாங்கும் சாமான்களையும் மதிப்பிடுகையில், பவுன் கணக்கிலேயே இங்கிலாந்து புள்ளி போடுகின்றது. அவ்விதம் புள்ளி போடும் காலையில், நாணயமாற்றுவிகிதம் (அதாவது பவுன் கணக்கில் ஒரு ரூபா இவ்வளவு மதிப்பு உள்ளது எனும் விகிதம்) சமயத்துக்கு ஏற்றவாறு மாறிமாறி வரும். அவ்விதம் மாறி வருவதில் இங்கிலாந்துக்குப் பெருத்த லாபமும், இந்தியாவுக்கு மிகுந்த நஷ்டமும் உண்டாகும். இதனை மற்றோரிடத்தில் புள்ளிக்கணக்கு மூலம் விளக்குவோம். இந்தியாவுக்கு நஷ்டம் நேரும்படியான முறையில், நாணயமாற்று விகிதத்தை நிர்ணயிப்பதா என்று இந்தியவர்த்தகர் பன்முறை வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறியுளர். கதறியும் என்ன? இந்தியாவிலே அர்த்த சாஸ்திர நிபுணர்களில் தலை சிறந்த K. T. ஷா என்பார் கூறும் வண்ணம், ஆட்சிமுறையின் காரணமாக நாணயமாற்று விகிதத்தில் இந்தியாவுக்கு உள்ள நஷ்டம் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்.

4. மகாயுத்த விளைவு

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கௌரவருக்கும் பாண்டவருக்கும் கடும் போர் மூண்டது. அஃது மகா பாரத யுத்தம் என்னப்படும். அந்த யுத்தம் நமது பாரத பூமிக்குமட்டும் சாபத்தீடாக முடிந்தது; ஏனைய தேசங்களுக்கோ நன்மையாக மாறியது. இந்த உண்மையை நமது "சுயராஜ்ய பேரிகை" மலர் 5 "பாரத ஜோதி" யில் விளங்கக் கூறியுள்ளோம். 1914-ஆம் ஆண்டில் மூண்ட ஐரோப்பிய மகா யுத்தமோ உலகனைத்தினுக்கும் பெருங்கேடாக முடிந்தது. அன்று ஏறின விலைவாசியும், தோன்றிய பணக் கஷ்டமும் இன்றுகூட உலகினரை விட்டபாடில்லை. அந்த மகா யுத்தத்தில் வெற்றிமாலை சூடிவிட்டோம் என்று ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் அப்போது ஆனந்த தாண்டவம் ஆடினர். அப்பனுக்குக் கலியாணம் என்று அறியாப்பிள்ளை மகிழ்ச்சி கொள்ளலாம். மாற்றாந் தாய் வந்து வயிற்றில் அடிப்பாள், கன்னத்தில் கிள்ளுவாள், என்பதை அப்பிள்ளை எங்ஙனம் ஊகித்து உணரமுடியும்? இங்கிலாந்தும் பிரான்ஸூம் அங்ஙனம் வெற்றிக் களியாட்டம் கொண்டும், பின்னாலே கதி கலங்கி நிலைகுலைய நேர்ந்தது. இங்கிலாந்தைப்பற்றி மட்டும் இங்கே கவனிப்போம். தோற்றுப்போன ஜெர்மனியிடமிருந்து, அபரிமிதமான யுத்த நஷ்ட ஈடு பெற ஏற்பாடு ஆயிற்று. அதனை மேற்சொல்லிய இரண்டு தேசங்களும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டன.

யுத்த நஷ்ட ஈடாக ஜெர்மனியால் ரொக்கம் கொடுக்க இயலவில்லை; ஆகவே பண்டங்களாகத் தர அது ஒப்புக் கொண்டது. பண்டங்களை உண்டுபண்ண வேண்டுமே? பண்டங்கள் பண்ணுவதற்கு வேண்டிய ஆள் பலமும் யந்திர சாதனமும் மூலப்பொருளும் ஜெர்மனியிடம் ஏராளமாக உண்டு. ஆயினும் அதற்கு மூலதனம் வேண்டுமன்றோ? அத் தனந்தான் அதனிடம் இல்லை. ஆதலின் முதல்பணம் தேடிக்கொடுத்தால், அதுகொண்டு, வேண்டும் பண்டஞ்செய்து தருவதாக ஜெர்மனி சாற்றியது. இங்கிலாந்தும் சரி சரி என்றது. ஆனால் இங்கிலாந்தினிடமோ

கைவசம் பணம் இல்லை. ஐரோப்பிய மகாயுத்த சமயத்திலே தனது நேசர்களுக்குக் கடன்கொடுத்து உதவ இங்கிலாந்துதேசம் பன்னீராயிரம் கோடி ரூபாய் அமெரிக்கா, பிரான்ஸ் இத்தேசங்களிடம் கடன்வாங்கி யிருந்தது. இந்தக் கடன் தொகைக்கு ஈடு செய்யவும் வட்டிகட்டவும் இங்கிலாந்துக்குப் பணம் வேண்டும். அஃதுடன், ஜெர்மனிக்குக் கடன் கொடுக்கவும் வேண்டும். ஜெர்மனிக்குக் கடன் கொடுத்தால், யுத்த நஷ்ட ஈடு வகையாலும் பிற வகையாலும் ஏராளமான லாபம் கிடைக்கும் என்று இங்கிலாந்து மனப்பால் குடிக்கலாயிற்று. தனது எல்லைக்குள் வேண்டுமளவு இங்கிலாந்துக்குக் கடன்கிடைக்கவில்லை. எனவே, மீண்டும் அமெரிக்கா, பிரான்ஸ் இத்தேசங்களிடமிருந்து இங்கிலாந்து கடன் வாங்கி, ஜெர்மனிக்குக் கொடுத்தது. லாவாதேவிக்காரரும் நாணய நிதி சாலைகளும் நீண்டகால கெடுவுக்கு சொற்ப வட்டிக்குக் கடன்வாங்கி, கொஞ்சகால கெடுவுக்கு அதிக வட்டிக்கு அதனைக் கொடுத்து லாபம் அடைதல் வழக்கம். இம்மாதிரி இங்கிலாந்து நடக்க முடியவில்லை. கொஞ்ச கால கெடுவுக்குள் திருப்பித் தருவதாகச் சொல்லி, ஏராளமாகக் கடன்வாங்கி, கால கெடுவில்லாமல் ஜெர்மனிக்கு இங்கிலாந்துதேசம் வட்டிக்குக் கொடுத்தது. ஐரோப்பிய மகாயுத்தம் 1918-ஆம் ஆண்டில் தீர்ந்துவிட, அதுமுதல் நேற்றுவரையில் பன்னிரண்டு வருஷகாலம் அவ்விதம் இங்கிலாந்து நடந்து வந்துளது கண்மூடித் தனமாக; விடிந்தால் தெரியும் மாப்பிள்ளையின் குருடு என்பர். அவ்விதம் ஒருநாள் இங்கிலாந்தின் கண்மூடித்தனம் அம்பலம் ஆகுமல்லவா? அவ்விதம் அம்பலத்துக்கு வந்தவுடன் இங்கிலாந்திலே பணம் வறண்டுவிட்டது ; ஆதலின் போன செப்டம்பர் மாதம் இங்கிலாந்திலே நாணய நிதி சாலைகளெல்லாம் ரஜாபெற்றுக் கதவை மூன்று தினங்கள் மூடிவிட்டன. இந்தியாவிலும் வடகோடியிலிருந்து தென் கோடிவரையில் அச்சாலைகள் ஒன்றிரண்டு தினம் மூடிக் கிடக்க நேர்ந்ததை நம்மவர் மறந்திரார். பண வறட்சியை சமாளிக்கமுடியாமல், தொழிலரசின் தலைவரான மாக்டொனல்டு என்பார் தம் கட்சியையும் கொள்கையையும் காற்

றில் பறக்கவிட்டு, ராஜீயக்கொள்கையிலும் போக்கிலும் தனக்குப் பரம எதிரிகளான கன்ஸர்வேடிவ் கட்சியாரிடம் சரண்புகுந்தார்; உடனே தொழிலரசு கலைந்து, கூட்டுக் கட்சி அரசாங்கம் சின்னாள் தலைதூக்கி நின்றது; இப்போதோ மொட்டைத் தலையும் முழங்காலும் கட்டுண்டதேபோல், கன்ஸர்வேடிவ் கட்சியின் ஆதிக்கத்தில் அவர் பிரதம மந்திரியாகப் பிரகாசிக்கிறார். இந்த வெளிச்சம் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

5. வயிற்றில் அடி

வெற்றிக் களியாட்டம் கொண்டமக்கள் வயிற்றிலும் அடிபட்டார்கள். அதன் விவரத்தை இங்கே சுருக்கிச் சொல்வோம். யுத்த நஷ்ட ஈடாக ஜெர்மனி தேசம் ஏராளமான பொருள்களைக் கொடுத்து வந்தது. அவற்றை பிரான்ஸும் இங்கிலாந்தும் பங்கு போட்டுக்கொண்டன. ஜெர்மனி கொடுத்த பொருள்கள் இரும்பு, நிலக்கரி, யந்திர சாதனங்கள் முதலியனவாம். யுத்தத்திற்கு முன்பும் சரி, மகா யுத்தகாலத்திலும் சரி, தனக்குவேண்டிய பொருள்களில் பலவற்றை இங்கிலாந்தினிடமிருந்து பிரான்ஸ் தேசம் விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தது. எனவே, இங்கிலாந்தின் பொருள்களுக்கு பிரான்ஸும் ஒரு சந்தைபோல் இருக்கலாயிற்று. ஜெர்மனியிலிருந்து பொருள்கள் கிடைக்கத் தலைப்பட்டவுடனே, அவ்வினங்களில் இங்கிலாந்துடன் பிரான்ஸு நடத்திவந்த வியாபாரம் குறையும் அல்லவா? மேலும், ஜெர்மனியிலிருந்து பல பொருள்கள் கிடைத்து வந்ததனால், அப் பொருள்களை இங்கிலாந்து தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லாமலும் போய்விட்டது. இவ்விதம் இரு வகையில் இங்கிலாந்தின் தொழில் பெருக்கம் குன்றலாயிற்று. குன்றவே, பல தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது.

மகாயுத்த சமயத்தில் இலட்சக் கணக்கான ஆங்கில ஆண்மக்கள் தங்கள் ஜீவன உபாயத்தைத் துறந்து போர் முனைக்குப் போயினர். யுத்தம் தீர்ந்து அன்னவர் திரும்பி வந்ததும், அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவ்வீரர் பார்த்துவந்த வேலைகளிலே, பெண்மக்கள் அமர்ந்தி

ருந்தனர். அப் பெண்மக்களைப் போகச்சொல்லி, ஆண் மக்களை அமர்த்த முடியாதல்லவா? யுத்தம் தீர்ந்தவுடன், இங்கிலாந்திலே பிழைப்பில்லாமல் திண்டாடியவர்களின் தொகை 110 லட்சம். இந்த ஆண்டிலோ 30 லட்சம். எனவே, யுத்தநிறுத்தங் காரணமாக வேலையில்லாத் திண் டாட்டம் அதிகரித்தது; ஜெர்மனியிலிருந்து பலபொருள் கள் கிடைத்ததனுலும் அத்திண்டாட்டம் இன்னும் பெரு கிற்று. வெற்றியின் பலா பலன் யாது? வாழ்வுக்கு வகை யில்லையே, வேலை கிடைக்கவில்லையே, எனும் கூக்குரலும் துன்பமுமேயாம். வேலையில்லாமல் திண்டாடுவோருக்கு ஆங்கில அரசு ஓரளவு பணம்கொடுத்து உதவுதல் வழக்கம். தவிர ஆபத்துக்காலத்தில் தலைகொடுத்த போர்வீரரைத் தெருவில் திரியவிட இங்கிலாந்து சம்மதிக்குமோ? சம் மதிக்காது. நடைமுதல் 1931-ஆம் ஆண்டிலே வேலை யில்லாதோருக்குக் கொடுக்கும் சகாயத் திரவியம் 600 கோடி ரூபாயாம். பிழைப்பில்லாமல் திண்டாடுவோரின் தொகை 27 லட்சமாக இருக்கும்காலத்திலே அத்தனை தொகை கொடுக்க நேர்கிறதென்றால், திண்டாடுவோரின் தொகை நூறுலட்சத்துக்கு மேல் இருந்தகாலையில், எவ் வளவு அதிகத் தொகை கொடுத்திருக்கவேண்டும் என் பதை யாவரும் யூகித்துக்கொள்ளலாம். இத்தகைய நிலைமை காரணமாக, இங்கிலாந்து ஏராளமான பணம் கடன்வாங்க வேண்டியிருந்தது; தவிர, யுத்தக்கடனுக்கான வட்டித் தொகையையும் கடன் வாங்கியே ஈடுசெய்யும் அவசியமும் உண்டாயிற்று. மகாயுத்தம் தீர்ந்த காலத்திலே, இங்கி லாந்தினிடம் கையிருப்பில் யுத்த தளவாடங்கள் ஏராள மாக இருந்தன. முதல் இரண்டு மூன்று வருஷகாலம் அத்தளவாடங்களை விற்றதில் பணம் புரண்டு கொண்டிருந் தது. அதனுல் பணத்தட்டு அவ்வளவாகப் புலப்பட வில்லை. ஆதலின் ஆங்கில ராஜதந்திரிகள் முன்யோசனை இல்லாமல், பணப்புழக்கம்கண்டு அலட்சியமாக இருந்து விட்டனர். அப்பாலோ, கடன் வாங்கியே காலந்தள்ள நேர்ந்தது. கொஞ்ச கால கெடுவினுக்கே அதிக வட்டிக்கு இங்கிலாந்து கடன் வாங்கியதனுல், கடன்காரர் பணம் கேட்கத் தலைப்பட்டனர். கையில் பணமோ இல்லை. தன்னை

அண்டி நின்றோரிடமிருந்தும் இங்கிலாந்து கடன் வாங்கியாகிவிட்டது. இனிமேல் கடன் கொடுப்பார் யாரும் இல்லை. எனவே சிக்கனத்தில் கவனஞ் சென்றது.

6. இந்தியாவின் தலையில்

இங்கிலாந்தின் ஏற்றுமதி குறைவாகவும், இறக்குமதி அதிகமாகவும் ஆகிவிட்டது. இறக்குமதி அதிகரிக்கவே, அதற்கு உரிய பணம் வேண்டும். அதனை எப்படி அடைவது? இந்தியாவின்மீது அதற்குப் பூரண அதிகாரம் உண்டல்லவா? நாணயமாற்று விகிதம் தனக்கு அனுகூலமாய் இருக்கும் வண்ணம் இங்கிலாந்து நிர்ணயித்துக்கொண்டது. தன்னிடம் உள்ள பொருள்களை இந்தியாவுக்கு அனுப்பி, அதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து தனக்கு வேண்டும் பொருளை அடைவதில் இங்கிலாந்துக்குக் கருத்துண்டு. ஆதலின், தனது பொருள்களை இந்தியாவுக்கு விற்பதில் இங்கிலாந்துக்கு லாபம் இருத்தல்வேண்டும். அதற்காக நாணயமாற்று விகிதத்தை—16 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்று இருந்ததை—18 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்று இங்கிலாந்து உயர்த்தியது. இதன் பலாபலன் என்ன? 18 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்றால், ஒரு பவுன் விலை ரூ. 13-5-4 தான் ஆகும். ஒரு பவுனுக்கு இங்கிலாந்திலிருந்து சாமான் தருவிப்போன் ரூ. 13-5-4 கொடுக்கவேண்டும். 16 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்றால், ஒரு பவுன் விலையுள்ள சாமானுக்கு ரூ. 15 கொடுக்க நேரும். எனவே, 18 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்று இருக்குங்காலத்தில், சீமைத்துணியைத் தருவிப்பவனுக்கு லாபந்தான். இங்கிருந்து சாமான்களை அனுப்புகிறவனுக்கோ நஷ்டம் என்பது வெளிப்படை. 18 பென்சுக்கு ஒரு ரூபா சமானம் என்ற காலத்தில் ஒரு பவுனுக்கு சாமானை அனுப்புவோன் ரூ. 13-5-4 தான் பெறுவான்; 16 பென்சாக இருந்தாலோ, ரூ. 15 பெறுவான். எனவே, நாணயமாற்று விகிதத்தை 18 பென்சாக உயர்த்தியதில், பிரிட்டிஷ் சாமான்களைத் தருவிப்பவனுக்கு லாபம்; இங்கிருந்து சாமான்களை அனுப்புகிறவனுக்கும் இந்திய விவசாயிக்குமே நஷ்ட

மாம். இங்கிருந்து உணவுப்பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், தோல்கள் இவைகளே பெரிதும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் இறக்குமதியைவிட ஏற்றுமதியே நமது இந்தியா தேசத்தில் அதிகம் என்பதைக் இச் சந்தர்ப்பத்தில் நம்மவர் கவனித்தல் வேண்டும்.

இந்தியாவின்மீது ஆதிக்கம் கொண்டிருப்பதனுல், நாணயமாற்று விகிதத்தைத் தனக்கு அனுகூலமாக இங்கிலாந்து வகுத்துக்கொண்டது. பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களின் விஷயத்தில் அவ்விதமே நாணய மாற்று விகிதத்தை இங்கிலாந்து வகுத்துக்கொள்ளக்கூடுமோ? கூடவே கூடாது; ஏனெனில், அத்தேசங்களோ சுயராஜ்ய சுதந்திரம் பெற்றவை. அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்துவது எங்ஙனம்? இனி, தனக்கு வேண்டிய சில பொருள்களை அத்தேசங்களிலிருந்து இங்கிலாந்து பெற்ருகவேண்டும். மேலும், அத்தேசங்களிலிருந்து இங்கிலாந்து கடனும் வாங்கி வருகின்றது. அக் கடன்தொகை ரொக்கமாகவும் இருக்கும், பண்டங்களாகவும் இருக்கும். இந்நிலையில் அத்தேசங்கள் சொல்லும் விலையைக்கொடுத்தே இங்கிலாந்து வாங்கவேண்டும். அல்லாமலும், இங்கிலாந்துக்கு சாமான்களை விற்பதில், நாணயமாற்று விகிதம் தங்களுக்கு அனுகூலமாக இல்லாமல்போனுல், அத்தேசங்கள் விற்பனை செய்யா. அத் தேசங்களிலிருந்து சாமான்களை வாங்கவும், அத் தேசங்களின் ஆதரவைப் பெறவும், நாடி நிற்கும் இங்கிலாந்துதேசமானது அத்தேசங்களுக்கு லாபகரமாக இருக்கும் முறையிலேயே தனது பொன் நாணயமதிப்பை வகுத்துக்கொண்டது. சுயராஜ்யம் இல்லா நம் தேசத்தின் சிறுமையையும், சுயராஜ்ய சுதந்திரம் வாய்ந்துள்ள அமெரிக்கா, பிரான்ஸ் இத்தேசங்களின் பெருமையையும் வாசகர்கள் யூகித்து உணர்ந்துகொள்ளலாம். தங்கள் பொருள்களை நல்ல விலைக்கு இங்கிலாந்துக்கு விற்பதில் அத்தேசங்கள் கருத்தாக இருந்தன. இங்கிலாந்திலிருந்து சாமான்களைத் தருவிக்கவும் அவைகள் எண்ணவில்லை; அங்ஙனம் தருவிக்க அவசியமும் இல்லாதுபோய் விட்டது. இதனுல் பிழைப்பில்லாத் திண்டாட்டம் இங்கிலாந்தில் மிகவும்பெருகிற்று; அத் திண்டாட்டம் பெருக

வே, வேலையில்லாதோருக்குக் கொடுக்கும் சகாயத் திரவி யத்தொகை ஏறியது ; இத்தொகை ஏறவே, கடன் மிகவும் சுமந்தது ; கடன் சுமரவே, தேசத்தின் செல்வ நிலைமை தத்தளித்தது. இத்தகைய தத்தளிப்பு நிலையில், இங்கி லாந்தின் கதி என்ன ? அதோகதி நேர்ந்துவிடும் என்று தான், ராஜீய எதிரிகளுடன் கைகுலுக்க நேர்ந்தது என்று பிரதம மந்திரி மாக்டொனல்டு பறை சாற்றலானர்.

7. வெட்ட வெளிச்சம்

புண்ணை மூடி வைக்க இயலுமோ ? அங்ஙனமே இங்கிலாந்தின் செல்வச் சீர்கேட்டை மறைத்துவைக்க முடியவில்லை. உலகிலே பல விதத்திலும் இங்கிலாந்து உச்சஸ்தானம் வகிப்பதாகும். அதன் உயரிய நிலைகண்டு பிறதேசங்களுக்கு உள்ளூர வெறுப்பும் கசப்பும் உண்டு. சமீபகாலமாக பிரான்ஸ் தேசம் இங்கிலாந்தினிடம் நேச பாசம் கொண்டிருக்கவில்லை ; அமெரிக்காவோ இங்கிலாந் தின் விஷயத்தில் ஏனோ தானோ என்று இருந்து வருகின் றது. இதன் விளைவாக, இங்கிலாந்தின் செல்வச் சீர்கேட் டைக் குறித்து வெகு தந்திரமாகப் பிரசாரம் நடக்க லாயிற்று. பிரான்ஸ் தேச அர்த்தசாஸ்திர நிபுணரொரு வர் இங்கிலாந்தின் நிலையை வெட்ட வெளிச்சமாக்கினர். ஒருவன் எவ்வளவு பணக்காரனக இருந்தபோதிலும், நாணயமும் மதிப்பும் இன்றேல், அவனுக்குப் பணம் பெய ராது ; கண்ணியமாகக் காலந்தள்ளவும் அவன் கஷ்டப் படுவான். தனி மனிதனுக்கு அப்படி என்றல, அரசாங் கத்துக்கும் அப்படித்தான். தனது பண நிலையைக் குறித்து ஏனையோர் சந்தேகிப்பதைக் கொண்டு, இங்கி லாந்து பரபரப்புக்கொண்டு, தனது செல்வ நிலையைத் தானே ஆய்ந்தறியத் தலைப்பட்டது ; உள்ள விஷயத்தை யும் கை நெல்லிக்கனிபோல் உணர்ந்துகொண்டது. அத் தேசத்தின் வரவு செலவில் 1200-லட்சம் பவுன் துண்டு விழலாயிற்று. வரவு குறைந்து செலவு பெருகிற்று.

இவற்றை எல்லாம் கண்டுகொண்டவுடனே, இங்கி லாந்தின் கடன்காரர் நெருக்கலாயினர் ; வரவு செல வில் 1200-லட்சம் துண்டு விழுவதற்கு வகை செய்தா

லன்றி, மேலும் கடன்கொடுத்து உதவ முடியாதென்று நாணயநிதி சாலைகள் கண்டிப்பாகக் கூறின. கொஞ்சகால கெடுவில் திருப்பித் தருவதாக வாங்கியிருந்த கடன்கள் காலாவதி ஆகும் சமயம் வந்து விட்டது. இங்கிலாந்து என்ன செய்யும்? தனது கையிருப்புத் தொகையை அது கணக்கிட்டுப் பார்க்கலாயிற்று. கையில் இருந்த தங்கமோ 1300-லட்சம் பவுன் தான். அமெரிக்காவுக்குக் கொடுக்கவேண்டிய அவசரக் கடன் தொகை 800-லட்சம் பவுன்; பிரான்ஸுக்கோ 500-லட்சம்; எனவே கையிருப்புக்கும் அவசரக்கடனுக்கும் சரியாக இருந்தது. என்னே இங்கிலாந்தின் நிலை! இரு சகோதரரின் கதைபோல் ஆயிற்று என்றே சொல்லலாம். காளைப்பருவம் கொண்ட சோதரர் இருவர் தலைக்கு அரையணா கொண்டு, கடைத்தெரு சென்று களியாட்டங்கொள்ள முயன்றனர். அங்கே சூதாட்டம் நடந்துகொண்டிருந்தது. இருவரும் முதலில் காலணா வைத்து ஆட்டம் ஆடினர். அதில் ஆறு அணா லாபம் கிட்டியது. மேலும் ஆடிக்கொண்டே போகவே, லாபம் எல்லாம்போய், பழைய அரையணாவே மிஞ்சியது. அதுகொண்டு இருவரும் களியாட்டம் கொண்டு வெறுங்கையுடன் வீடு திரும்பினர். இங்கிலாந்தின் நிலைமையும் அப்படியே முடிந்தது. கையிலிருந்த பணத்தைக் கடனுக்குக் கொடுத்துவிட்டு, இனி தங்கச் செலாவணி இல்லை என்று தீர்மானிக்கலாயிற்று. இங்கிலாந்தின் செல்வ நெருக்கடிக்கான கதை இதுவேயாம். உலகெங்கும் பற்பல துறைகளில் ஆதிக்கம் செலுத்தியது போதும், உடும்பு கையை விட்டால்போதும், எனும் நிலைக்கு இங்கிலாந்து ஆளாகியது. கால சக்கரத்தின் சுழற்சியைப் பாருங்கள்!

8. ஆசையின் பலன்

அவசரக்கடனுக்கு ஒருவகையில் ஈடு செய்தாகிவிட்டது. வரவு செலவில் 1200-லட்சம் பவுன் துண்டு விழுகிறதே; இதற்கு என்ன செய்வது? இங்கிலாந்திலிருந்த ஏழைகளோ, "நாங்கள் என்ன செய்வோம்? பணக்காரரைகப்பார்த்து அவர்களிடமுள்ள முதல் பணத்தில் ஒரு பாகம் வரியாகப்பெற்று, துண்டு விழும் அத் தொகைக்கு

ஈடு செய்யலாம்", என்றார்கள். பணக்காரரோ, "அது கூடாது; எங்கள் முதலண்டை வாரார்கள். வேலையில்லாமல் திண்டாடுவோருக்குக் கொடுக்கும் சகாயத்திரவியத்தில் நூற்றுக்கு 10-வீதம் குறைத்து ஈடு செய்யுங்கள்" என்றனர். இப்படி அங்கே பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் இடையே பிரமாதமாக வாதம் நிகழ்ந்தது. பொது நல சிந்தையும் ஐக்கியப் பான்மையும் இல்லையே என்று இந்தியாவைநோக்கி இலேசாகப் பேசும் இங்கிலாந்தின் மக்களது மன நிலையைப் பாருங்கள். செல்வ நெருக்கடி நேர்ந்து திண்டாடுகையில், ஏழை பணக்காரனைக் காட்டுகிறான்; பணக்காரனே ஏழையின் தலையில் கையை வைக்கலாம் என்கிறான். பேராபத்து நேர்ந்தகாலையில் அம்மக்கள் ஒரு மனங் கொள்ளவில்லை. இதனால், இங்கிலாந்திலே தொழில்கட்சி சின்னபின்ன மாயிற்று; லிபரல் கட்சியினரோ இரண்டுபட்டுப் போயினர். கன்ஸர்வேடிவ் கட்சியாரோ தம்முள் மாறுகொண்டு மல்லுக்கு நின்றனர். தொழிலரசு தொலைந்து, கூட்டரசாங்கம் ஒரு மூன்று நாளைக்கு வாழ்ந்தது. அப்பால் அக் கூட்டரசாங்கமும் கவிழ்ந்து, பொதுத் தேர்தல் நடந்தது. தொழில் கட்சியினரோ தேர்தலில் முறியடிக்கப்பட்டுப்போயினர்; லிபரல் கட்சியினரோ, ஆண்டி பெற்றது ஐந்தும் அவலம் என்றாயினர்; கன்ஸர்வேடிவ் கட்சியார் கைமேலாகி, மந்திரிசபையில் பல ஸ்தானங்கள் வகிக்கிறார்கள். தொழில் கட்சியின் தலைவரான மாக்டொனல்டு என்பார் தமது பழைய நேசர்களைக் கைவிட்டு, எதிர்க்கட்சியினரின் முதன் மந்திரியாக இப்போது திகழ்ந்து நிற்கின்றார்.

கட்சிகள் குலைந்து, அரிய கொள்கைகள் காற்றில் பறந்தாலும், செல்வ நெருக்கடிக்கு மூல காரணம் யாது, இனி அந்நெருக்கடி நேராதிருக்க யாது வகை, என்பதை இங்கிலாந்து உணர்ந்துகொண்டதாகப் புலப்படவில்லை. வியாபாரம் பெருக வேண்டும், தொழில் வளர்ச்சி ஓங்க வேண்டும், கட்டியாளும் பிரதேசங்கள் விசாலமாகவேண்டும், ஏகாதிபத்தியம் இணையிலாது திகழவேண்டும், உலகெங்கும் ஆங்கில சாமானுக்குச் சந்தைவேண்டும், பற்பல தேசமக்களையும் கட்டியாளுதல் வேண்டும், என்று முன்பின்

யோசியாமல் இத்துணை நாளாக இங்கிலாந்து பிரம்மப் பிர யத்தனம் செய்யா நின்றது. அகிலம் எல்லாம் கட்டி யாளினும், ஆசைக்கு ஓர் அளவில்லையே என்றார் தாயு மானவர். இங்கிலாந்தோ தனது ஆசையின் எல்லையைக் கண்டுவிட வேண்டுமென்று கண்மூடித் தனமாகக் கண் ணும் கருத்துமாக இருந்தது. அதன்பலன் இப்போது கைமேல் கிடைத்துவிட்டது. முற்பகல் செய்யின், பிற் பகல் விளையும் என்றாள் ஔவை. இக்கலியுகத்திலோ எல் லாம் கைக்கு மேலாகக் கிடைத்து விடுகின்றது.

9. அறுபது கோடி

இங்கிலாந்திலே செல்வநிலை அங்ஙனம் உளது. பவு னுக்கு அங்கு உள்ள மதிப்போ குறைந்துவிட்டது. இந் நிலையில், இந்தியாவிலே நாணயச்செலாவணி, பணப்புழக் கம், நாணயமாற்று விகிதம் இவற்றின் கதி என்ன? இங்கி லாந்தின் செல்வச் சீர்கேடு காரணமாக இந்தியாவுக்கு எவ்விதம் பாதகம் ஏற்படுகிறது? என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தியாவின் நாணயமான ரூபாயோ ஒரு பவுனில் இவ்வளவு என்று ஆதிமுதல் இங்கிலாந்து அவ் வப்போது தனக்கு ஏற்றவாறு நிர்ணயித்துவருவதால், பவுனுக்கு நேரும் மதிப்புக்குறைவு, ரூபாயையும் சார்கின் றது. இங்கிலாந்திலே இச்சமயம் பவுனுக்கு உள்ள மதிப்பு குறைந்திருக்க, அப்பவுனில் ஒரு ரூபாய் இவ்வள வுக்கு சரி என்று இங்கிலாந்து வகுத்துவிட்டது. அவ்வி தம் பவுனுடன் ரூபாயை இணைத்தலாகாது, ஆனால் தங் கத்தில் ஒரு ரூபாய் இவ்வளவுக்கு சரி என்று வகுக்க வேண்டும், என இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லியும், அதனை இந்தியா மந்திரி புறக்கணித்துவிட்டார். அத னால், பவுனுடைய விலைமதிப்பு குறைவதற்கு ஏற்றவாறு, ரூபாயின் மதிப்பும் குறைகின்றது. தற்போது உள்ள நிலைமையின்படி, நான்கு ரூபா விலையுள்ள மல்பீஸை ஒருவன் ஜப்பானிலிருந்து தருவித்தால், ஐந்து ரூபா கொடுக்கவேண்டும். ஏனெனில் ரூபாயின் மதிப்பு குறைந் துளது. 18 பென்சுக்கு ஒரு ரூபாய் சரி, என்று வகுக் காமல், 16 பென்சுக்குச் சரி என்று வகுக்க வேண்டு

மென இந்திய வியாபாரிகள் கேட்டு வந்துளர். அவ்விதம் 16 பென்சாக வகுத்தால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் சாமான்களுக்கு இப்பொழுது கொடுக்க நேர்வதைப்போல், அதிக விலை கொடுக்க நேராது; அஃதுடன் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களுக்கும் இப்பொழுது கிடைப்பதைவிட இன்னும் கால்பங்கு அதிகவிலை கிடைக்கும். இப்படி இருவகையிலும் இந்தியாவுக்கு நலம் ஏற்படும் 16 பென்சாக வகுத்தால்; அவ்விதம் செய்துவிட்டால், இங்கிலாந்தின் வியாபாரத்துக்கு நஷ்டம் ஏற்படும் அன்றோ? இதற்கு இங்கிலாந்து எங்ஙனம் சம்மதிக்கும்? இந்தியாவின் பணவிஷயமாய் இங்கிலாந்து கொண்டுள்ள பான்மையை நாம் நன்கு அறியவேண்டுமானால், ஐரோப்பிய மகாயுத்த காலம்முதல் நடந்த சம்பவங்களைக் கவனித்தல் வேண்டும். மகா யுத்தம் தீர்ந்தவுடனே, 34 பென்சுக்கு ஒரு ரூபா சரி என்று நாணயமாற்று விகிதம் ஏற்பட்டது. எனவே இங்கு வியாபாரி ஒருவன் ஏழரை ரூபா செலுத்தினால், இங்கிலாந்திலே அவனுக்கு ஒருபவுன் கிடைக்கும். இத்தகைய காலத்தில், 120 கோடி ரூபாய் விலையுள்ள அரசாங்க உண்டியல்கள் இங்கே ஐரோப்பிய வியாபாரிகளுக்கே பெரும்பாலும் விற்கப்பட்டன. அந்த உண்டியல்களை அவர்கள் வாங்கி, இங்கிலாந்துக்கு அனுப்பினர்கள். இங்கே ஏழரை ரூபாய் கொடுத்தால், இங்கிலாந்திலே 15 ரூபா விலையுள்ள சவரன் கிடைக்கும் அல்லவா? இவ்வகையில் ஐரோப்பியர் ஏராளமான லாபம் அடைந்தனர். இந்தியாவுக்கோ 60 கோடி நஷ்டம். அவ்விதம் 1922-ஆம் ஆண்டிலே ஓர் ஆறுவார காலத்திற்குள் உண்டியல்கள் ஐரோப்பியருக்கு விற்கப்பட்டன.

10. எதிர்வரிப் போர்

ஐரோப்பிய யுத்த சமயத்திலே இந்திய வியாபாரிகள் இங்கிலாந்துக்குப் பேருதவிபுரிந்தனர். மிதவாதிகளோ இந்தியாவின் பணத்தில் இங்கிலாந்துக்கு 150 கோடி ரூபா நன்கொடை கொடுக்க இசைந்தனர்; சீமைத்துணிகளோ இந்திய மில் துணிகளுடன் போட்டிபோட்டன. அதனை

இந்திய மில்துணிகள் சமாளிக்கமுடியவில்லை. ஆதலின் சீமைத்துணிகளுக்குப் போட்டிருக்கும் நூற்றுக்கு 7 வீதம் உள்ள இறக்குமதித் தீர்வையை 11 ஆக உயர்த்தவேண்டும் என்று அந்த வியாபாரிகளும் மிதவாதிகளும் பிரமாதமாகக் கிளர்ச்சி செய்தனர். இச்சந்தர்ப்பத்தில் பழங் கதையை ஒரு சிறிது கவனிக்கவேண்டும். 1853-ஆம் ஆண்டில் முதன்முதல் பம்பாயிலே மில் ஏற்பட்டது. அதனால், சீமைத்துணிகளுக்குப் போட்டி ஏற்படும் என இங்கிலாந்து கருதிற்று. கருதவே, இந்தியாவின் மில்களில் உற்பத்தியாகும் 20-ம் நம்பருக்கு மேற்பட்ட நூல்களுக்கெல்லாம் நூற்றுக்கு மூன்றரை வீதம் எதிர்வரி விதிக்கப் படலாயிற்று. இந்தியாவில் மில்கள் தலையெடுக்கக்கூடாது என்று இங்கிலாந்து கையாண்ட ஏற்பாடு ஈதாகும். 1858-ஆம் ஆண்டு முதல் 1925-ஆம் ஆண்டு வரையில் இந்திய மில்களுக்கும் அரசாங்கத்துக்கும் போராட்டம் நடந்துகொண்டே வந்தது. போராட்டம் நடந்தும், அரசாங்கத்தாரே கைமேலாக இருந்தனர். மூன்றரை வீதம் போட்டிருந்த எதிர்வரியோ ஒரு சமயம் ஐந்தரையாக உயர்த்தப்பட்டது. சீமைத்துணிகளுக்குப் போட்டிருந்த இறக்குமதி வரியானது வரி வருமானத்தை உத்தேசித்துப் போடப்பட்டதேயல்லாமல், இந்தியாவின் மில்தொழிலைக் காக்கவேண்டும் எனும் கருத்துடன் போடப்படவில்லை. ஆதலினால், இந்தியாவின் மில்தொழிலைக் காக்க வேண்டும் எனும் கருத்துடனேயே அந்த இறக்குமதி வரி விதிக்கப்படவேண்டும் என்றும், அதனை 11 ஆக உயர்த்த வேண்டும் என்றும், இந்தியர் பெருங்கிளர்ச்சி செய்தனர். அப்போது சட்டசபையில் சுயராஜ்யக்கட்சியினர் வன்மை கொண்டு இருந்ததனால், அந்த எதிர்வரி தொலைந்ததோடு, இறக்குமதி வரியும் நூற்றுக்கு 11 ஆக உயர்த்தப்பட்டது.

11. சூதாட்டம்

இந்திய மில்களின்மீது போட்டிருந்த எதிர்வரி தொலைந்து, சீமைத் துணிகளுக்கு நூற்றுக்கு 11 வீதம் இறக்குமதி வரிபோட்டு, மில்துணிகளுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டவுடனே, இந்தியரில் பலரும் ஆனந்தம்கொண்

டனர். அப்போது ஒத்துழையா இயக்கம் ஒய்ந்து, சுய ராஜ்யக் கட்சி தோன்றித் தருக்கிநின்ற காலம். எனவே அரசாங்கத்துடன் ஒத்துழையாமையை மேற்கொள்ளுவதில் யாதுபயன், ஒத்துழைத்ததனுல் அல்லவா எதிர்வரி தொலேந்து, காப்புவரியும் ஏற்பட்டது, என்று பலரும் பேசத்தொடங்கினர். இனிமேல், இந்திய மில்துணிகளை சீமைத்துணிகளைவிட 100-க்கு ஏழரை வீதம் மலிவாக விற்கலாம் என்றும் எண்ணிக்கிடந்தனர் பலர். அந்த ஆனந்தம் நெடுநாள் நிலேக்கவில்லை. நாணயமாற்று விகிதமோ 16 பென்சிலிருந்து 18 பென்சாக உடனே உயர்ந்துவிட்டது. அந்த உயர்வு நூற்றுக்குப் பன்னிரண்டரை வீதம் ஆகும். 18 பென்சுக்கு ஒரு ரூபாய் சரி என்ருல், இறக்குமதி செய்வோனுக்கே லாபம் உண்டு என்று முன்பு ஓரிடத்தில் விளக்கி யிருக்கிறேம். இங்கிலாந்திலே ஒரு பவுன் விலேகொண்ட சாமானை இங்கே தருவிக்கும் ஒருவன் இங்கே ரூ. 13-5-4 கொடுத்தால்போதும். நாணயமாற்று உயரவே, சீமைத்துணியானது முன்பு இருந்ததைவிட 100-க்குப் பன்னிரண்டரை வீதம் மலிவாக இங்கே கிடைக்கமுடியும். இறக்குமதிவரி அல்லது காப்புவரி நூற்றுக்கு 11 ஆக இருந்தும், அந்தக் காப்புவரியைச் செலுத்திய பின்புகூட, இந்திய மில்துணியைவிட சீமைத்துணி இங்கே நூற்றுக்கு ஒன்றரைவீதம் மலிவாகக்கிடைக்கும் அல்லவா? எனவே காப்புவரி விதித்தும் யாதுபயன்? காப்புவரி கண்டு களித்த பலரின் கதி என்ன? இந்திய மில்துணிகளிடம் அபிமானம் உள்ளதுபோல் காட்டி, காப்புவரியும் போட்டு, உடனே நாணயமாற்றில் சூது செய்த பான்மையை எண்ணிப் பார்க்கவேண்டும்.

12. கோலத்தின்கீழ்

பாய்க்குக்கீழே நுழைந்தால், கோலத்தின்கீழே நுழைவான் என்பது ஒரு பழமொழி. இங்கிலாந்து பாய்க்குக்கீழே நுழைய, ஜெப்பான் தேசமோ கோலத்தின்கீழே நுழைய லாயிற்று. அது கண்டு, இங்கிலாந்து தேசம் திகைத்து விழிக்க நேர்ந்தது. இதனை உரைக்கு முன்பு, 1929, 1930 இந்த ஆண்டுகளிலே அரசாங்கம் நடந்து

கொண்ட பான்மையைக் கவனிக்கவேண்டும். காப்புவரி போட்டபின்பு, நாணயமாற்று விகிதத்தை உயர்த்தி, அரசாங்கம் ஒரு சூது புரிந்ததல்லவா? அச்சூதை ஜனங்கள் நன்கு கண்டுகொண்டனர்; கண்டுகொண்டதும் பெருங் கிளர்ச்சி புரியலாயினர்; மில்துணிகளுக்கு உள்ள காப்பு வரியை நூற்றுக்கு 11-லிருந்து 20 ஆக உயர்த்தவேண்டும் என்றும் கோரினர். அவ்விதம் காப்பு வரியை உயர்த்த அரசாங்கம் சம்மதித்தது; ஆனால், ஏகாதிபத்திய சாமான்களுக்கு மட்டும் சற்றே சலுகை காட்டவேண்டும் என்று கேட்டது. அதன்படி, இங்கிலீஷ் துணிகளுக்கு 100-க்கு 15 வீதம் இறக்குமதி வரி விதிப்பதாக ஏற்பாடாயிற்று. இதுகண்டு, மில்காரரும் மிதவாதிகளும் திருப்திகொண்டார்கள். அரசாங்கமோ ஜெப்பான் துணிகள் இங்கு வந்து குவிவதைக்கண்டு, அதனைத் தடுக்க முயற்சிசெய்யலாயிற்று. இந்தியாவில் உற்பத்தியாகும் துணிகளால் நேரும் போட்டியை அவ்வளவாக அரசாங்கம் கவனிக்கவில்லை. அன்னிய தேசத்துணிகள் இந்தியாவிலே சீமைத் துணிகளுடன் போட்டி போடுவதைத் தடுப்பதிலேயே அரசாங்கத்தின் கவனம் பெரிதும் சென்றது. புதிதாக ஏற்பட்ட காப்புவரியின்படி, இந்தியாவில் இறக்குமதியாகும் (ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி இத்தேசங்களின்) துணிகள் 100-க்கு 25 வீதம் வரிகொடுக்க வேண்டியிருக்க, சீமைத்துணியோ 15 வீதமே வரிகொடுக்க நேர்ந்தது. ருஷியாவைப் புறங்கண்டு, ஐரோப்பிய வல்லரசுகளுக்குச் சரிசமமான அந்தஸ்து வாய்ந்துள்ள ஜெப்பானே ஒரு தந்திரத்தைக் கையாளலாயிற்று. அதாவது, துணிகளை ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்குச் செல்லும் கப்பல்கள் எல்லாம், கப்பல் கேள்வியில் 100-க்கு 5 வீதம் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடுசெய்தது; அஃதுடன் அக்கப்பல்களுக்கு நஷ்டஈடாக உதவியும் செய்யத்தலைப்பட்டது. இதனால், சீமைத் துணிகளுக்கு மட்டும் இந்தியாவில் வரிக்குறைவு இருந்ததை, கப்பல் கேள்வியின் மூலம் ஜெப்பான் சரிப்படுத்திக்கொண்டு, சீமைத்துணிகளுடன் போட்டிபோடும் நிலையை எய்திவிட்டது. இங்கிலாந்தோ அதுகண்டு மயக்கங்கொண்டு, யாது செய்வ

தென்று தோன்றாமல் திகைக்கலாயிற்று. ஏதேதோ சூதுசெய்தும், இந்தியாவிலே ஜெப்பான் துணிகளுடன் சீமைத்துணி போட்டிபோட முடியவில்லை.

13. உயிர் நிலை

சவரனுடன் ரூபாயை இணைத்து இருத்தலால், பலா பலன் யாது? இதனைச் சிறிது ஆராய்தல் அவசியம். சவரனே இங்கிலாந்திலே மதிப்பில் குறைந்துவிட்டது; அதனுடன் பிணைக்கப்பட்டிருக்கும் ரூபாயும் தனது மதிப்பில் குறையவேண்டியதுதான்; வேறு வகையில்லை. ஜெப்பானுக்கோ ஜெர்மனிக்கோ அமெரிக்காவுக்கோ இறக்குமதி வகையில் இந்தியா கொடுக்கவேண்டிய பணமோ இங்கிலாந்திலே பவுன் கணக்கில் பைசல் ஆகவேண்டியிருக்கிறது. பவுனுக்கு மதிப்புக் குறைந்திருக்க, அப்பவுன் கணக்கிலேயே இந்தியா பணம் கொடுக்க நேர்கையில், 100-க்கு 25 வீதம் அதிகம் கொடுக்க நேர்கின்றது. ரூபாய்க் கணக்கிலேயே கொடுக்கும்படியிருந்து, பவுனுடன் ரூபா பிணைக்கப்பட்டிராமல் இருப்பின், 100-க்கு 25 வீதம் இந்தியாவுக்கு லாபம் இருக்கும். பவுனுடன் ரூபாயைப் பிணைத்திருக்கும் பலன் இதுவேயாம். ஜெப்பான் துணிகள் அந்த ஏற்பாட்டினால் இந்தியா தேசத்திலே விலை அதிகமாகும்; விலை அதிகமாயின், சீமைத்துணியுடன் போட்டி போடமுடியாது. இந்த நிலைமையை ஜெப்பான் எங்ஙனம் சமாளித்துக்கொள்ளுமோ இனிமேல்தான் தெரியவேண்டும். சீமைச்சாமான்களை நாம் பகிஷ்காரம் செய்யமுயன்றால், நாணயமாற்று விகிதச் சூதுமூலம் அதனை ஒருவகையில் இங்கிலாந்து சமாளித்துக்கொள்ளும் என்பது வெளிப்படை. உதாரணமாக, நம்மை நோக்கி, "நல்லது! நீங்கள் சீமைச் சாமான்களை பகிஷ்காரம் செய்கிறீர்கள். அதனை சமாளித்துக்கொள்ள எனக்குத் தெரியும், சீமைச் சாமான்களை நீங்கள் பகிஷ்காரம் செய்யுங்கள் பார்க்கலாம். ஜப்பானிலிருந்து நீங்கள் சாமான்கள் தருவித்தால், அதன் விலை ஏறும் வண்ணம் நான் வகை தேடிவிடுவேன். ஜெப்பான், ஜெர்மன் சாமான்களை விட எங்கள் சாமான்கள் மலிவாக இருக்கும்படி செய்யும் தந்திரம் எங்

களுக்குத் தெரியும். நீங்களோ சுயநலத்தை மதித்து, தேசாபிமானத்தை விடுத்து, விதியின்றி சீமைச் சாமான்களை வாங்குவீர்கள் என்பது திண்ணம்", என்று இங்கிலாந்து சொல்லக்கூடும். எனவே இந்தியாவின் தொழில், வியாபாரம், விவசாயம் எல்லாம் நலம்பெற வேண்டுமானல், நாணயச் செலாவணியில், நாணயமாற்று விகிதத்தில், வரவுசெலவில் நமக்குப் பூரண அதிகாரம் இருந்தாலன்றி முடியாது. பண சுதந்திரம் இல்லாமல், மற்ற அம்சத்தில், நாம் சுதந்திரம் அடைந்தும் யாது பயன்?

14. தலைக்குக் கொள்ளி

தலைக்குக் கொள்ளியை விலைக்கு வாங்குவதா என்பர் பெரியோர்? மேனடுகள் அவ்விதம் தலைக்குக் கொள்ளி தேடியே திரிகின்றன. இங்கிலாந்துக்கும், ஜெர்மனிக்கும் நேர்ந்த செல்வ நெருக்கடி கொண்டு, மேனடுகள் நல்லறிவு கொள்ளுமா என்பது கேள்வி. இன்றளவும் மேனடுகள் கொண்டுள்ள பான்மை யாது? ஓய்வு ஒழிவு இல்லாமல் மேனடுகள் பணம் பணம் என்று பேய் பிடித்துத் திரிகின்றன; மேனட்டு மக்களுக்கு அன்ருடம் சிறிதுபோழ்து கூட ஓய்வு என்பது இல்லை; மானிட உடலும் ஆண்டவன் படைத்துள்ள ஓர் யந்திரமன்ருே? அந்த யந்திரத்திற்கு ஓய்வும் நிம்மதியும் வேண்டாமோ? தொழில் முறையில் பண்டங்களை அளவுக்குமிஞ்சி அவைஉற்பத்தி செய்து வருகின்றன. அதனல், சாமான்களின் தன்மையை மதித்து அவற்றிற்கான அவசியத்தை மனிதர் தேடிக்கொள்ள வேண்டி யிருக்கிறது. பண்டங்களின் உற்பத்திக்காக யந்திர சாதனங்களை அவைகள் பெருக்கி வருகின்றன. பிரஜா விருத்திக்கும், உணவு உட்கொள்ளுவதற்கும் மட்டுமே இன்னும் யந்திர சாதனங்கள் கண்டு பிடிக்கவில்லை. நீரிலும் நிலத்திலும் ஆகாயத்திலும் விரைந்து செல்லக்கூடிய யந்திரங்கள் புதிதாகத் தோன்றுகின்றன. லாபம் சம்பாதிப்பதிலேயே முதலாளிகள் கருத்தாக இருக்கின்றனர்; யந்திர சாதனங்கள் பெருகவே, மனிதரில் பலருக்குப் பிழைப்பு இல்லாமற் போகின்றது. அதனல் வாழ்வில்லாச் சங்கடம் அதிகரிக்கின்றது, இச்சங்கடம் அதி

கரிக்கவே, புதிய நாடுகளைப்பிடித்துக் குடியேறவும், அங்கே சாமான்களை விற்கவும் அவை முயலுகின்றன. முடிவில் எல்லாம் வியர்த்தமாகவும் அனர்த்தமாகவும் தீர்கின்றன. குளிக்கப்போய் சேற்றையா பூசிக்கொள்வது?

கீழ்த்தேசங்களோ மேனுடுகளின் பான்மை கண்டும், தமதுநிலையை நோக்கியும், நல்லுணர்வு கொண்டுள. இந்தியா, சீனு, பாரசீகம், அரேபியா, எகிப்து, ஆப்கானிஸ்தானம், இவைகள் அயல்தேச சாமான்கள் வேண்டாம் என்கின்றன; பிரிட்டிஷ சாமான்களைப் புறக்கணிக்கவும் தலைப்பட்டுள. எனவே, இனிமேல் கீழ்நாடுகளில் மேனுட்டுச்சாமான்களை முன்போல் கொண்டுவந்து குவிக்க இயலாது. எனவே அச்சாமான்களுக்குச் சந்தை ஏது? அந்த மேனுடுகளே ஒன்றின் சாமான்களை மற்றொன்று வாங்கிக்கொள்ளவும் ஒண்ணுது. எல்லாத் தேசங்களும் ஒன்றுபோல் பண்டங்களைச் செய்யின், ஒன்றின் சாமானை மற்றொன்று வாங்க அவசியம் ஏது? கொல்லன் தெருவில் ஊசி விற்பது எப்படி? மேனுட்டுச் சாமான்களிலே, பிரிட்டிஷ் சாமான்களின் விலையே அதிகமாம். இங்கிலீஷில் இங்கிலாந்து விழுந்து விழுந்து தொழில் பெருக்கில் முனையின், அவை விலையாக வழியுண்டோ? எனவே, இங்கிலாந்தும் சரி, ஏனைய மேனுடுகளும் சரி, தமக்கு வேண்டிய சாமான்களை மட்டுமே தயாரித்துக் கொள்ளும்படியான காலமும் அவசியமும் வந்துவிட்டன என்னலாம்; இன்றேல் விரைவில் அக்காலம் வரும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. தவிர, தொழில் பெருக்கங் காரணமாக தேசமக்களிலே ஒரு சிலரின் கைக்குள் செல்வம் திரண்டு குவிந்து கிடக்க நேர்கின்றது. எல்லாருக்கும் சரிசமமாகப் பலன் கிட்டுவதில்லை. ஆதலின், யந்திர சாதனப் பெருக்கைக் குறைத்துக்கொண்டு, தொழில் வளர்ச்சியையும் மட்டுப்படுத்திக் கொண்டால் அல்லாமல், மேனுடுகள் நிம்மதியாக வாழ முடியாது. அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் விஷம் அல்லவா? யானைவரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே என்பர். பின்னுல் ஏற்படக்கூடிய அழிவுக்கு எச்சரிக்கை நேர்ந்துளது. இது மூளையில் ஏறுமா

15. காந்தி வழி

வருங் காலத்திலே உலகத்தின் நிலை என்னுவது? பணத்தட்டும் வியாபாரப் போட்டியும் வளர்ந்துகொண்டே போனுல், மக்கள் சுகமே வாழமுடியுமோ? ஒயாக்கவலை இருப்பின், உலகவாழ்வில் வெறுப்புத் தட்டும் அன்றே? ஒருவர் இருவர் அங்ஙனம் வெறுப்புக்கொள்ளின், அன்னவர் உலகைத் துறந்து கானகம் சென்றுவிடலாம். ஒரு தேச அல்லது பலதேச மக்கள் ஒருங்கே வெறுப்புக் கொள்ள நேரின், உலகம் நிலை குலையும் அன்றே? இதற்கான மூலகாரணங்களைக் கண்டறிந்து,தேசங்களின் போக்கும் நோக்கும் வகுக்கப்படுதல் வேண்டும். சென்ற இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக உலகத்திற்கு வரும் வினை எல்லாம், ஐரோப்பிய தேசங்களாலேயே நேர்கின்றன. ஐரோப்பிய தேசங்களிலே பிரான்ஸ், இத்தாலி, ருஷியா, இவைகள் பெரும்பாலும் விவசாய தேசங்கள். வாழ்வுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், தொழில் முறைக்கு அவசியமான மூலப் பொருள்களையும், அத்தேசங்கள் தாமாகவே தம் எல்லைக்குள் தேடிக்கொள்ளமுடியும். ஜெர்மனி, இங்கிலாந்து, இவ்விரண்டு தேசங்களின் நிலையோ அப்படி அன்று. அந்த இரண்டு தேசங்களிலும் கிடைக்கும் பொருள்கள் இரும்பும் நிலக்கரியுமே. அந்த இரண்டையும் கொண்டு, அவைகள் தங்கள் தொழிலை அமோகமாகப் பெருக்கிக் கொள்கின்றன. தொழில் முறையில் அவ்விதம் தயாராகும் பொருள்களைக் கொடுத்து, வாழ்வுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் பிற தேசங்களிலிருந்து அவை பெற்றுக்கொள்ளவேண்டும். ஏனைய தேசங்களும் தங்கள்பொருள்களுக்குச் சந்தை தேடுகின்றன. இவ்வாறு போட்டி உண்டாகின்றது. இங்கிலாந்தும் ஜெர்மனியும் அப்போட்டியை விடுத்து, தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் தேசத்திலேயே உற்பத்திசெய்துகொள்ள வகை தேடவேண்டும்; தங்கள் தொழில் பெருக்கையும் மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். இங்கிலாந்தோ ஆண்டுதோறும் 72 கோடி ரூபா

லையுள்ள தனது துணிகளையும் நூல்களையும் இந்தியாவில் கொணர்ந்து குவிக்கின்றது. இந்தியாவோ அத் துணியும் நூலும் வேண்டாம் என்று போராடுகின்றது; தானே அவற்றைத் தயாரித்துக்கொள்ளவும் முயலா நிற்கின்றது.

ஆனதுபற்றி இங்கிலாந்து கஷ்டப்படுகிறது அன்றோ? நெசவுச்சாலைகளில் சிலவற்றை அடியோடு மூடிவிடக் கூடாதா என்று அங்கே சில மதியூகிகள் யோசனைசெய்து வருகின்றனர். தேவைக்கு மிஞ்சிய சாமான்கள் தயாராகி விடுவதனாலேயே உலகெங்கும் கஷ்டம் நேருவதாக இங்கிலாந்திலே ஒரு பாதிரியார் கண்ணீர் வடிக்கின்றார். இந்நிலையைச் சமாளிக்கவேண்டுமாயின், அகில தேசங்களும் சேர்ந்து, சமரஸமான ஒரு முடிவுக்கு வருதல்வேண்டும் என்பது அப்பாதிரியாரின் கருத்து. ஆகவே லாபந்தேடி, செல்வத்தைக் குவித்தல் எனும் தீய நோக்கை முதலாளிகளும் தேசங்களும் விட்டொழிக்கவேண்டும். வாழ்வின் தேவைக்கு மிஞ்சிய பொருள்கள் உண்டாகிவிடும், அப்பொழுது பலவகைக் கஷ்டங்கள் நேரும், என்று காந்தி மகான் கருதியே, யந்திர சாதனங்கள் வேண்டாம் என்கிறார். இதன் உட்கருத்தை உலகம் இன்னும் கண்டு கொள்ளவில்லை. நமது தேவைகளை அதிகப்படுத்திக் கொண்டே போகவேண்டாம், எதிலும் செட்டாய், சிக்கனமாய் இருக்கலாம், இருக்கவும் வேண்டும் என்பதே காந்தியின் போதம் ஆகும். அதனால்தான், குடிசைத் தொழில்கள் விருத்தியாகவேண்டும், யந்திரசாதனங்கள் கொண்ட ஆலைகள் வேண்டாம், என்று மகாத்மா மொழிகிறார். நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டுவோன் பைத்தியக்காரனாக மதிக்கப்படுவான்! இதுவே உலகம்!

16. ஏமாற்றிப் பிழைத்தல்

இங்கிலாந்தில் உள்ள அர்த்த சாஸ்திர நிபுணரில் ஒருவர் எழுதியிருப்பதின் சாரம் வருமாறு:—“இப்போது நமது இங்கிலாந்து தேசத்தின் செல்வ நிலையைக் குறித்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகின்றோம். உலகத்திலே இச்சமயம் தேவைக்கு மிகவும் அதிகமாகத் தொழில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. அதனைச் சமாளிக்க

முடியவில்லை. தங்கநாணயச் செலாவணியை நாம் நிறுத்தி விட்டதால், இங்கிலாந்து நலபலம் பெறமுடியும் என்று பலரும் எண்ணிக் கிடக்கின்றனர். நாணய மதிப்பு குறைந்திருப்பதனால், இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி அதிகரிக்கும், இறக்குமதி குறையும், எனவே இருவகையிலும் இங்கிலாந்துக்கு லாபம் உண்டு, என்று சிலர் பேசுகின்றனர். இங்கிலாந்தின் நாணய மதிப்பு குறைந்திருப்பதனால், இங்கிலாந்திலிருந்து அதிக மலிவாக அயல்நாட்டார் சாமான் வாங்கமுடியும் என்பதுமெய்தான். ஆனால் ஒரு விஷயம். உலகெங்குமே வியாபாரம் மிக மந்தமாக இருக்கையில், தங்கள் தொழில்களுக்கு இடையூறாக ஆங்கில சாமான்கள் வந்து குவிவதைக்கண்டு, ஐரோப்பாவும் அமெரிக்காவும் கைகட்டி வாய்மூடி யிருக்குமோ? இங்கிலாந்தின் சவரன் நாணயம் உலகிலே நடுநாயகமான தன்மை வகித்திருந்தது மெய்யே. இப்போது உள்ள நிலைமை யாது? அமெரிக்காவில் வழங்கும் நாணயம் டாலர் எனப்படும்; பிரான்ஸில் வழங்குவது பிராங்கு என்பது. இந்த இரண்டுக்கும் இடையே இங்கிலாந்தின் சவரன் ஊசல் ஆடுகின்றது. இப்படி இங்கிலீஷ் நாணயம் ஊசல் ஆடின், உலகிலே பிரிட்டிஷ் மக்களின் மதிப்பு என்னாகும்? ஆங்கில நாணயத்தின் மதிப்பு குறைந்திருப்பதனால், அயல் தேசத்திலுள்ள கடன்காரருக்கு நாம் பணம் கொடுக்கும்பொழுது, அதிகமாகக் கொடுக்கவேண்டும்; இங்கிலாந்துக்குக் கடன் கொடுக்கவேண்டிய அன்னியரோ குறைவாகவே கொடுக்க நேரும். நாணய மதிப்பு குறைந்ததனால், இங்கிலாந்துக்கு உண்டாயிருக்கும் பலனைப் பாருங்கள். இவ்விதம் இருவகையிலும் இங்கிலாந்து தேசம் நஷ்டம் அடைகின்றது. இந்த நஷ்டத்திற்கு நமது தேசத்தினரும் தொழில்களும் ஈடு செய்தாகவேண்டும். இதன் பலாபலன் யாது? ஆங்கில மக்களின் வாழ்வுக்கான செலவு வளரும்; தவிர தொழில் முறையில் உற்பத்தியாகும் சாமான்களின் விலையும் உயரும். நாணயமதிப்பு குறைந்திருப்பதனால், இங்கிலாந்தின் ஏற்றுமதி பெருகி, இறக்குமதி குறையும் என்பதின் பலாபலன் மேற்சொன்னதேயாம். பொதுவாகப் பார்க்குமிடத்து, லாவாதேவி உலகிலே பிரிட்டிஷாரின்

மதிப்பு என்னும் என்பதையும் எண்ணிப் பார்த்தல் அவசியம். நமது நாணயச் செலாவணியின் வன்மையும், நாணயகிதிசாலைகளின் திண்மையும், நமது வியாபாரமுறைமையும் சேர்ந்து, உலகிலே நமதுமதிப்பை இன்றளவும் நிலைநாட்டி யிருந்தன; லாவாதேவிக்கு லண்டன்மாநகரமே நடுநாயக நிலயமாகவும் இருந்துவந்தது. இங்கிலாந்தின் நாணயமதிப்பு நாளுக்குநாள் ஊசலாடிக் கொண்டிருக்கையில், லண்டன்மாநகருக்கு இருந்துவந்த நடுநாயகத் தன்மை இனிமேலும் நிலைநிற்குமோ? உலகில் உள்ள தங்கத்தின் மொத்த மதிப்பில், மூன்றில் இரண்டு பங்கை அமெரிக்காவும் பிரான்ஸும் தம்மிடம் அடக்கி வைத்துக் கொண்டுள என்பதை ஆங்கிலேயரில் எத்தனைபேர் நன்கு உணர்வர்? உலகிலே லாவாதேவியில் லண்டனுக்கு இருந்துவந்த நடுநாயக நிலைமையைப் பறித்துக்கொள்ளப் பல வருஷங்களாகவே அமெரிக்காவும் பிரான்ஸும் பெருமுயற்சி செய்துவந்துள. உலகின் செல்வ நிலைமையில் நமக்கு இருக்கும் ஆதிக்கம் போய்விடின், இங்கிலாந்துக்கு விளையக்கூடிய அனர்த்தம் பேசுந்தரமன்று. செல்வநெருக்கடியிலிருந்து மீண்டும் இங்கிலாந்து தலைதூக்கவேண்டுமானால், ஆங்கிலமக்கள் அளவற்ற தியாகம் செய்யவேண்டும், மிகவும் வருந்தி உழைக்கவேண்டும். வேறுவழி கிடையாது. முன்னம் உரோம ஏகாதிபத்தியம் வீழ்ச்சியுறுவதற்குச் சிறிது முன்பு, அதற்கு என்ன சங்கடம் நேர்ந்திருந்ததோ, அதேமாதிரியான சங்கடம் இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் நேர்ந்துள்ளது. இந்த உண்மையை அனைவரும் மனத்தில் இருத்திக்கொள்ளல் வேண்டும். நமது நிலையோ பேராபத்தாகவும் பெருங்கவலைக்கு இடமாகவும் இருக்கின்றது. இதிலிருந்து தப்பி வெளியேற விதியில்லையே என்பதில்லை. நமது கதி நமது கைக்குள் இருக்கின்றது. ஆதலின் நாம் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால், கடைத்தேறலாம், கதிமோட்சமும் அடையலாம்.''

இங்கிலாந்தின் மற்றொரு நிலையைக் கவனித்தல்வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி வரி விஷயத்தில் காப்புவரி அல்லது தடை வரி கொள்வதில்லை என்பது இங்கிலாந்து

மேற்கொண்டிருந்த ஒரு கோட்பாடாகும். அக் கோட்பாட்டைத் தனக்கு ஒரு பெருமையாகவும் அது நேற்று வரையில் கொண்டிருந்தது. இப்போதோ அக்கொள்கை ஆடிக் காற்றில் இலவம்பஞ்சு பறப்பதுபோல் பறந்துவிட்டது. காப்புவரி எனும் வேலிபோட்டு, பிறதேச சாமான்களைத் தடுக்க இங்கிலாந்து முற்பட்டுவிட்டது. உடனே, பிரான்ஸும் அமெரிக்காவும் அம்முறையைக் கையாளலாயின. இதற்கு இடையில் பிரிட்டிஷ் சாமான்களையே வாங்கவேண்டும் என்று பிரமாதமாக இங்கிலாந்திலே பெருங்கிளர்ச்சியும் பிரசாரமும் நடக்கலாயின. செல்வ நெருக்கடியையும் வியாபார மந்தத்தையும் சமாளிக்க இங்கிலாந்து பாடுபடுகின்றது. பட்டவர்த்தனமாகப் பேசினல், இங்கிலாந்து இருப்பதா, மறைவதா என்னும் நிலைமை தோன்றியுளது என்பதில் இம்மியும் ஆட்சேபம் இல்லை. முதலாளிகள் என்போர் தங்களைப் பிடித்தாட்டும் பணப்பேயை ஓட்டிவிட்டு, எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணங்கொண்டு, தாங்கள் குவித்து வைத்துள்ள அல்லது குவித்துவைக்கக் கருதும் பணத்தில் ஒரு பங்கை உதவின், இங்கிலாந்து தேசத்தின் திணறலும் தவிப்பும் நீங்கும்.

17. தேசங்கள் ஏலம்போதல்

ஐரோப்பாவின் மத்தியபாகத்தில் உள்ள தேசங்களின் நிலைமையோ மகா பரிதாபமானது. ஆஸ்டிரியா, ஹங்கேரி எனும் இரண்டு தேசங்களும் ஏலம்போகின்றன என்னலாம். இரு தேச மந்திரிகளும் மகா சிக்கனஞ் செய்ய அரும்பாடு படுகின்றனர். அரசாங்க ஊழியர்களின் சம்பளமோ அளவுகடந்து குறைக்கப்பட்டுவிட்டது. எவ்வளவு வரி விதிக்கமுடியுமோ அவ்வளவு வரியும் விதித்தாய்விட்டது. இனிமேல் வரிச்சுமை பெருகின், அத்தேசமக்கள் தாங்கமுடியாது. மேலே என்ன செய்வது? தேசத்தின் ஆஸ்தியை விற்கும் நிலைமை வந்துவிட்டது. ஆஸ்டிரிய தேசத்தின் மிகப்பெரிய சொத்தொன்றை அன்னியர் வாங்கிவிட்டனர். மற்றொரு பெருஞ்சொத்தான மின்சார ஸ்தலமொன்றும் கைமாறிப்போயிற்று.

தனது ரயில்பாதைகளை விற்கவும் ஆஸ்டிரியா தேசம் எண்ணங்கொண்டுள்ளது. அதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்துவருகின்றன. ஹங்கேரியின் கதிதான் என்ன? பிரான்ஸ், அமெரிக்கா இந்த இரண்டு தேசங்களிடமே கையில் ஏராளமான பணம் இருக்கின்றது. இந்த இரு தேசங்களும் வட்டியை நம்பிக் கடன்கொடுக்கக் கருத்துக் கொள்ளவில்லை; ஆனால், துர்ப்பாக்கியமான ஆஸ்டிரியா, ஹங்கேரி, இருதேசங்களின் சொத்துக்களை விலைக்கு வாங்கவே எண்ணி நிற்கின்றன. அவ்விதம் விலைக்கு வாங்குவதில், பிரான்ஸூம் அமெரிக்காவும் போட்டி போடுகின்றன. எனவே ஏலம் நடைபெறத் தொடங்கிவிட்டது; ஹங்கேரியும் ஆஸ்டிரியாவும் தங்கள் ஆஸ்திகளை விற்றுவருகின்றன. இந்நிலைகண்டு தேசமக்கள் கொதிப்புக்கொள்ளாமல் இருப்பரோ? மந்திரிசபையின்மீது ஜனப்பிரதிநிதிகள் கடுங்கோபம் கொண்டுளர். ஆஸ்டிரியா, ஹங்கேரி இந்த இருதேசங்கள்மட்டுமே தவிக்கின்றன என்பதில்லை. ருமேனியா போன்ற சிறு தேசங்களும் திணறுகின்றன. இந்தத் தேசங்களிலும் தேசங்களின் முக்கியமான சொத்துக்களை அமெரிக்காவிடமும் பிரான்ஸிடமும் அடகு வைத்துக் கடன் வாங்கியாகிவிட்டது. இங்ஙனம் தேச சொத்துக்களை அன்னியரிடம் விற்பதனால், அல்லது அடகுவைப்பதனால், ராஜீய நிலைமை என்னாகும்? முதலில் வியாபாரஞ் செய்யப்போய், அப்பால் அத்தேசத்தையே பிடித்துக்கொள்ளுதல் என்பது பிரிட்டிஷ் பழமொழிகளில் ஒன்றாகும். இது உண்மைதான். இப்போதோ அப்பழமொழியின் உண்மை தலைகீழாக மாறிவருகின்றது. முதலில் ராஜீய ஆதிக்கம்கொண்டு, அப்பால் வியாபாரத்தைப்பெருக்கும் முயற்சி தோன்றியுளது. பிரான்ஸூம் அமெரிக்காவும் ஏராளமான பணம் வைத்திருந்தும், மேலே சொல்லிய தேசங்களுக்குக் கடன் கொடுக்க முதலில் சம்மதிக்கவில்லை. ராஜீய ஆதிக்கம் பெற இரண்டும் முயன்று, பலனடைந்தபின்பே கடன் கொடுக்க முன்வரலாயின. ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் முன்னம் ஐரோப்பியர் வியாபாரிகளாகப் புகுந்தனர்; வியாபார ஆதிக்கம் பெற்ற

பின்பு, ஐரோப்பியப் படைவீரர் போயினர்; நாடுகளை வசஞ்செய்து கொண்டனர்; உடனே சிறுகச்சிறுக ஐரோப்பியரின் ஆட்சி அக்கண்டங்களிலே பரவலாயிற்று.

இனி, ஐரோப்பாவில் உள்ள மத்திய தேசங்களின் சொத்துக்களை ஒரேயடியாக விலைக்கு வாங்குவோர் பற்பல ஜாதியினராகவும் தேசத்தினராகவும் இருப்பின், அவ்வளவு கெடுதல் இராது. அச்சொத்துக்களை விலைக்கு வாங்குவோர் பிரஞ்சுக்காரரும் அமெரிக்கருமாகவே இருக்கின்றனர். வருங்காலத்தில் இதன் பலாபலன் என்னுகும்? அமெரிக்கருக்கோ ராஜீய நோக்கம் இல்லை, வியாபார நோக்கமே உண்டு என்று சொல்லலாம். எனினும், இக்காலத்திலே அங்ஙனம் சொல்வதற்கில்லை. பிரஞ்சுக்காரரோ ராஜீய நோக்கம்கொண்டே அச்சொத்துக்களை வாங்குகின்றனர். ஆஸ்டிரியா, ஹங்கேரி, ருமேனியா, முதலிய தேசங்களின் தொழிற்சாலைகள், ரயில்பாதைகள், தந்தி தபால் சாதனங்கள் இவற்றை வாங்குதல் கேவலம் வட்டியை மதித்தே என்று தோன்றலாம். ஆனல் ஐரோப்பாவிலே ஆதிக்கம் வகிக்கவேண்டும் எனும் ஆசைகொண்டுள்ள பிரான்ஸின் கையில் அத்தொழில்களும் பிறவும் இருத்தல், ராஜீய விஷயத்தில் பேராயுதங்கள் போலாகும் என்பது திண்ணம். கடன் கொடுக்க வகை இல்லாதுபோனதும், வியாபார மந்தமுமே இச்சமயம் ஐரோப்பாவை ஆட்டிவைக்கின்றன.

18. காப்பா, தீங்கா?

காப்பு வரிபோட்டுக் காலந்தள்ளிவிடலாம் என்று இங்கிலாந்து கருதி நிற்கின்றது. அது சாத்தியமா என்று பார்ப்போம். 1931-ஆம் ஆண்டு ஸெப்டம்பருடன் முடியும் பன்னிரண்டு மாத காலத்திலே, இங்கிலாந்தில் இறக்குமதியான பொருள்களின் மதிப்பு 88 கோடியே 10 லட்சம் பவுன். இதில் 42 கோடியே 70 லட்சம் விலையுள்ள சாமான்கள் யாவை என்ருல், உணவுப்பொருள்கள், பானவகைகள், சுருட்டு முதலியன. இவற்றை எல்லாம் இங்கிலாந்து உடனே தன் தேசத்தில் தேடிக்கொள்ளமுடியுமா? உணவுப்பொருள்களுக்கு அடுத்தபடி

யாக, இங்கிலாந்தில் இறக்குமதி ஆகும் பொருள்களோ தொழில் முறைக்கு வேண்டிய மூலப்பொருள்களாகும். 1931 ஸெப்டம்பருடன் முடியும் ஒரு வருஷகாலத்தில் 18 கோடியே 30 லட்சம் பவுன் விலையுள்ள மூலப்பொருள்கள் இங்கிலாந்தில் இறக்குமதி ஆகியுள. அந்த மூலப்பொருள்கள், பருத்தி, ஆட்டுரோமம், பெட்ரோல் எண்ணெய், ரப்பர் முதலியனவாம். இந்தப் பொருள்களின் இறக்குமதி குறைந்தால், அல்லது தடைப்பட்டால், இங்கிலா திலே தொழில்கள் எங்ஙனம் நடக்கமுடியும்? மேற்சொ லிய ஒருவருஷ காலத்தில், இங்கிலாந்தில் இறக்குமதியான தொழில்முறைப் பொருள்களின் மதிப்பு 26 கோடியே 1(லட்சம் பவுன். இவைகளுக்கு ஏற்கெனவே காப்புவரி போல் இறக்குமதி வரி போடப்பட்டுள்ளது. இவைகளுக்கு இன்னும் அதிகமாக இறக்குமதிவரி போடின், முடிவு என்னகும்? இவைகளின் இறக்குமதியைத் தடுத்துவிட்டால், உடனே இங்கிலாந்தில் இவற்றைச் செய்து கொள்ள இயலுமோ? பொதுவாகப் பார்த்தால், இங்கிலாந்து காப்புவரி போடுவதனல், உலகவியாபாரம் இன்னும் குறைவுபடும். அமெரிக்காவின் பொருள்களை ஏராளமாக வாங்கிக்கொள்வதில், கானடாவுக்கு அடுத்தபடி இங்கிலாந்தேயாம். தனது வியாபாரம் குறைவதைக் கண்டு, அமெரிக்கா வாளா இருக்குமோ? இராது. ஆதலினல்தான், அமெரிக்காவும் காப்புவரி போடத் தீர்மானித்துள்ளது. பல காரணங்களை முன்னிட்டு உலக தேசங்கள் ஒன்றையொன்று சார்ந்து நிற்பதனல், ஒன்றினுக்கு ஏற்படக்கூடிய பலாபலன் மற்றென்றையும் பாதிக்கும். இதனை எண்ணிப்பாராமல் நடப்பதில் யாது பயன் உண்டு? தொழிலில் பெருத்த இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் இவை காப்புவரிப் போர் போட முற்படின், முடிவில் அது வாள்போராக முடியாதோ?

19. இகபர வாழ்வு

நமது முன்னோரான முக்தரும் பக்தரும் தவசிகளும் துறவிகளும் சாதிக்காத காரியம் இல்லை. இருந்த இடத்தில் இருந்தே, ஈரேழு புவனங்களையும் பார்க்கு

சக்தி பெற்றிருந்தனர்; கண்ணிறுக மூடியிருந்து, காண முடியாத கடவுளையும் கண்ணெதிரே பார்த்தனர்; நினைத்த அளவில் எதையும் சிருஷ்டிசெய்தனர்; கருதிய அளவில் காசினியை அழிக்கவும் வன்மை பெற்றிருந்தனர். அத்தகைய ஆற்றல்படைத்த நமது பெரியோர், யந்திர சாதனங்களைக் கண்டுபிடித்து உலகினுக்கு உதவாமல் போனதேன்? மனிதர் மனிதராக வாழவேண்டும், மிருகப்பிராயமாக வாழ்தல் கூடாது, மானிடவாழ்வோ மின்போல் மறையக்கூடியது, இகவாழ்வு ஒரு பெரியது அன்று, பரலோக வாழ்வே பிரமாதம் ஆனது, இதற்குரிய துறைகளில் மக்கள் நடத்தல்வேண்டும், அப்பொழுதுதான் உலகம் நிம்மதியாக வாழ முடியும், என்று அம் மகான்கள் எண்ணினர். இதனை இக்கலியுகத்தில் பலரும் மறந்துவிடுகின்றனர்; அதனால் தான் மாழ்கி மடிகின்றனர். யுகப்பிரளயம், யுகப்பிரளயம் என்பர் பெரியோர். யுகப்பிரளயம் என்பது என்ன? ஐரோப்பிய மகா யுத்தம் ஒருவகையில் யுகப்பிரளயம் ஆகும்; அப்போது அப்பப்பா எத்தனை உயிர்கள் அழிந்தன? எத்துணை பொருள்கள் நாசமாயின; எவ்வளவுபேர் அல்லோல கல்லோலம் அடைந்தனர்! தற்போது ஏற்பட்டிருக்கும் செல்வ நெருக்கடியும் யுகப்பிரளயத்தின் ஓர் அம்சமேயாம். மக்கள் படும் பாடு மொழியும் தரம் அன்று. சிறுகக்கட்டிப் பெருகவாழ் என்றுள் ஔவையும். மக்களோ பெருகக் கட்டிக் குறுகவாழ்ந்து குமுறுகின்றனர். பணத்தைப் பரப்பி அதன்மீது படுத்துக்கொண்டிருக்கும் அமெரிக்கா தேசமும் தற்சமயம் தனது வரவை விடச் செலவு அதிகமாகித் துண்டு விழுவதைக்கண்டு திகைப்புக்கொண்டு கிடக்கின்றது: இங்கிலீஷில் காந்தி மகான் உலக போதகராகத் துலங்குகின்றார். கிழவன் பேச்சைக் கிண்ணாரக்காரன் கேட்பானா? அவரது போதத்தின்படி நடப்பின், எல்லாரும் நம் பெறுவோம்! வந்தே மாதரம்!!

219496

முதல் பதிப்பு, ஐயாயிரம் பிரதிகள்; 15—12—'31.

Kesari Printing Works, Madras.

கூடிய சீக்கிரம் வெளிவரும் நூல்கள்

மலர் **13**. காந்தி மாமா காந்தி தாத்தா கதைகள்:— இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் புறப்பட்டு, அங்கிருந்து திரும்பிவரும் வரையில், காந்தி மகான் கண்ட காட்சிகளும் சம்பவங்களும் அனந்தம். அங்குத் தான் அவருக்கு மாமா காந்தி, தாத்தா காந்தி என்று பெயர்கள் ஏற்பட்டன. பல பெரியாருடன் அவர் பேசியிருந்த காலையில், அதி அற்புதமான நிகழ்ச்சிகள் தோன்றின. அவையனைத்தும் இலக்கியம்போல் பிரகாசிக்கும். அக்கதைகளோ சிந்தைக்கு இனிய உணவாம்; செவிக்கு உகந்த சுவையாம்; படிக்கப் படிக்கப் பரமானந்தம் ஊட்டும்.

மலர் **14**. நேருவீரர் சரிதம்:—பண்டித மோதிலால் நேருவோ பூதவுடல் நீத்துவிட்டார்; ஆனால் புகழுடம்பு பெற்று புவியிலே விளங்குகின்றார்; இந்திரபோகம் அனுபவித்த அப்பெரியார் எதனையும் தியாகம் செய்த விவரம் தேவருக்கும் பிரமிப்பை உண்டுபண்ணும். செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்த ஜவஹர், பட்டினத்தடிகளைப்போல் பக்திபூண்டு, ஏழைக்கு இரங்கி, எளியவரின் பங்காளனாகத் துலங்குதல் என்றுமில்லாக் காட்சியாகும். இவரது மனத்துறவும் புத்தரது துறவும் ஒப்பநோக்கத் தக்கன.

மலர் **15**. வட்டமேஜை மகாநாடு —இந்தியாவின் வருங்கால அரசியலை வகுக்க லண்டன்மா நகரிலே மகாநாடு கூடியது உண்மையே. எல்லாம் வெளிமயக்கே என்றார் பட்டினத்தார். புறஞ்சுவர் கோலம் செய்தான் கர்ணன் என்பர் பெரியோர். அவ்விதம் வட்டமேஜை மகாநாடு வெளிமயக்காய், புறஞ்சுவரின் கோலமாய்த் திகழ்ந்த கதையை அனைவரும் அறிதல் அவசியம். அதன் நடவடிக்கைகளின் சாரமும் இந்நூலில் காணப்படும்.

"வீர [illegible]"
32, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி,
சென்னை.

2-19496

ஏஜண்டுகள் தேவை.

"சுயராஜ்ய பேரிகை" க்கு ஒவ்வோர் ஊரிலும் ஏஜண்டு தேவை. ஏஜண்டாக இருக்க விரும்புவோர் உடனே நமக்கு எழுதுவாராக. தற்போது உள்ள ஏஜண்டுகளின் விவரம்.—

1. மதுரை :—ஸ்ரீ. M. A. கிருஷ்ணசாமி, நியூஸ் ஏஜண்டு.
2. கும்பகோணம்:—ஸ்ரீ. துரை, காளியமர்த்தன் கதர்ஸ்டோர்.
3. நாமக்கல்: ஸ்ரீ. எஸ். ராமசாமி, தேசீய பாடசாலை.
4. தூத்துக்குடி :—ஸ்ரீ. S. பிரமநாயகம் பிள்ளை, வியாபாரம்.
5. திருநெல்வேலி:—ஸ்ரீ. S. முத்தையாபிள்ளை, புத்தகக்கடை.
6. திருச்செந்தூர் .—ஸ்ரீ T ஐயாப்பிள்ளை, புத்தக வியாபாரம்.
7. நாகர்கோயில் :—ஸ்ரீ. K. சுப்பைய பண்டாரம்.
8. தென்காசி :—ஸ்ரீ. S. ராமசுவாமி, கதர் ஸ்டோர்.
9. கோபிசெட்டிபாளையம் :—ஸ்ரீ. G. V. ராமகிருஷ்ணன்.
10. பெங்களூர் தண்டு :—ஸ்ரீ. V. அப்பாவு செட்டி & ஸன்ஸ்.
11. காரைக்குடி:—ஸ்ரீ M. சிதம்பர தேசிகர், ஹிந்து ஏஜெண்டு.
12. கூனூர் :—ஸ்ரீ. S. R. தங்கவேலு, காதி வஸ்திராலயம்.
13. திருப்பத்தூர் :—ஸ்ரீ. S. S. வில்வநாதன் சேர்வை.
14. நெய்யூர் :—ஸ்ரீ. V. A. சுப்பிரமணியம், தேசத்தொண்டர்.
15. ராணிப்பேட்டை :—ஸ்ரீ. K R. கல்யாணராம ஐயர்.
16. காரைக்கால் :—ஸ்ரீ. S. M. செய்கு முகம்மது.
17. காட்டூர் :—ஸ்ரீ. K. R. சக்கரவர்த்தி முதலியார்.
18. திருப்பத்தூர் :—(வட ஆறகாடு) ஸ்ரீ. V. ராமச்சந்திர ஐயர்.
19. கோயில்பட்டி :—ஸ்ரீ. S ஆவுடைநாயகம் பிள்ளை.
20. திருச்சி .—ஸ்ரீ. K. ஸ்ரீனிவாசன், நியூஸ் ஏஜண்டு.
21. ஈரோடு :—ஸ்ரீ. A. வேலாயுதம், புத்தக வியாபாரம்.
22. பெரம்பலூர் :—ஸ்ரீ. S. K. M. அங்கமுத்து பிள்ளை.
23. கோரோமாண்டல் :—ஸ்ரீ. C. N. அருணாசலம்.
24. கிருஷ்ணகிரி :—ஸ்ரீ. K. S. லட்சுமணராவ், நியூஸ் ஏஜண்டு.
25. திருவனந்தபுரம் :—ஸ்ரீ. N. ஸ்ரீனிவாசன்.
26. கோவை :— ஸ்ரீ.C. N. நாராயணன்
27. தஞ்சை :—ஸ்ரீ. N L. ஐயர், நியூஸ் ஏஜண்டு.

காலங் கண்ட நண்பன்

ஒரு வருஷம் இரண்டு வருஷம் அன்று

40 வருஷங்களுக்கு மேலாகக் கைகண்ட அன்பன்

வலியையும் குத்தலையும் விரட்டுவான்,

திடீரென்று நேரும் விபத்தைப் போக்குவான்,

தீராத வலியைத் தீர்த்து வைப்பான்.

யார் அவன்?

அவனே

அமிருதாஞ்சன்

பச்சிலை மூலிகைகளாலேயே ஆனவன்,

யாதொரு தீங்கும் விளைக்கான்,

கண்ணைக் கவரும் டப்பியில் உள்ளான்,

உடனே உதவுவான், உபசரிப்பான்,

எங்கும் கிடைப்பான்.